## 36: பதிமூன்று மன்னர்கள்

மஹாலக்க நாகாவின் மரணத்திற்குப் பின் அவருடைய புதல்வாரன பாடிகடிஸ்ஸகாகா *(Bhatikatissaka)* என்பவர் ஸ்ரீ லங்காவை இருபத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் மஹா விஹாராவை சுற்றி சுவர் எழுப்பினார். காவரடிஸ்ஸா *(Gavaratissa)* விகாராவை அமைத்து அதன் உபயோகத்திற்கு மஹாமனி *(Mahámani)* என்ற குளத்தையும் கட்டினார். பட்டிக்கடிஸ்ஸா *(Bhatikatissa)* என்ற விகாராவையும் கட்டினார். துாபராமாவில் இன்னொரு விகாராவைக் கட்டி ரன்தகண்டகா *(Randhakandaka)* என்ற குளத்தையும் அமைத்தார். இளகிய மனம் படைத்தவர் வேறுபாடின்றி புத்த பிட்குக்களுக்கும், பிட்குணிகளுக்கும் நிறைய தானங்கள் கொடுத்தார்.

அவருடைய மரணத்திற்குப் பின் அவருடைய இளைய சகோதரரான கனிததிஸ்ஸகா *(Kanitthatissaka)* என்பவர் பதவி ஏற்றார். அவர் பூடராமாவில் *(Bhutaráma)* இருந்த தேரா மஹாநாகாவிற்கு பரிச்சயம் ஆனவர் என்பதினால் அபயகிரியில் இரதனபாசாதாவை *(Ratanapásáda)* அமைத்தார். அபயகிரியை சுற்றி சுவர் எடுப்பி பெரிய பரிவனாவை அங்கு கட்டி, மனிசோமா *(Manisoma)* விகாரில் இன்னொரு பரிவனாவைக் கட்டினார். சிடியாவில் ஒரு ஆலயமும் அதைப் போல நாகதீபாவில் இன்னொரு ஆலயமும் கட்டினார்.

மஹாவிராஹாவில் கட்டடப்பட்டு இருந்த சுவர்களை இடித்து விட்டு அந்த இடத்தில் பல அறைகளைக் கட்டினார். நான்கு பக்க பாதசாலையும் அங்கு கட்டினார். தக்ஷின விகாராவில்

இருந்த ஸ்துாபாவற்கு வலு கொடுக்க அதையும் புதுப்பித்தார். மேகவனாவில் இருந்து சுவர்களையும் அகற்றி அங்கு அன்னதானக்கூடம் அமைத்தார். மஹாவிஹாராவில் இருந்த சுவற்றை இடித்து அங்கிருந்து தக்ஷின விகாராவுக்குப் போக சாலை அமைத்தார். புதமரானவிகாரா *(Bhutárámavihára)*, ராமகோனகா *(Ramagonaka)*, மற்றும் நன்தாதிஸ்ஸா *(Nandatissa)* போன்ற விகாராக்களை அமைத்தார்.

கிழக்குப் பகுதியில் கங்கராஜி என்ற இடத்தில் அனுலாதிஸ்ஸபப்பத்தா *(Anulatissapabbata)*, நியலடிஸ்ஸிராமா *(Niyelatissárama)*, பிலபிட்டிவிகாரா *(Pilapitthivihára)*, மற்றும் இராஜம விகாரா *(Rájamahávihára)* போன்றவற்றைக் கட்டினார். மேலும் மூன்று உபோசதாக்களையும் கட்டி கல்யானிகவிகாரா *(Kalyanikavihára)*, மண்டலகிரிகா *(Mandalagirika)*, மற்றும் துப்பலவாபிட்டிஸா *(Dubbalavápitissa)* போன்றவற்றையும் கட்டினார்.

அவருடைய மரணத்திற்குப் பின் அவருடைய மகன் குஜ்ஜநாகா *(Khujjanága)* என்பவர் ஆட்சிக்கு வந்தார். அவர் ஒரு வருட காலம் அரசாண்டார். அவரை கொலை செய்து விட்டு அவருடைய இளைய சகோதரர் குஞ்சநாகா *(Kuñchanága)* என்பவர் இரண்டு வருடங்கள் ஆட்சி செய்த பொழுது ஏகநாலிகா *(Ekanálika)* என்ற பஞ்சம் தலை விரித்தாடிய பொழுது ஐநுாறு புத்த பிட்குக்களுக்கு தொடர்ந்து தானங்களை செய்து வந்தார்.

ஆனால் மன்னனுடைய மனைவியின் சகோதரரும் படைத் தலைவருமான ஸ்ரீநிகா *(Sirinága)* என்பவர் மன்னனுக்கு எதிராக மாறி தனக்கேற்ற படைகளை தயார் செய்து கொண்டு

தலை நகருக்கு வந்து மன்னனுடன் யுத்தம் செய்து அவரைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியவுடன் அனுராதபுரத்தை பத்தொன்பது ஆண்டுகள் ஆண்டு வந்தார். ஸதுாபி மீது அழகிய வேலைபாடுகள் அமைந்த வெண்சாமர குடை அமைத்த மன்னன், லோஹபாசதாவை ஐந்து மாடிக் கட்டிடமாக மாற்றி அமைத்து, அதில் இருந்து போதி மரம் இருந்த இடத்தின் நான்கு வாயில்களுக்கும் செல்ல படிக்கட்டுக்கள் அமைத்தார். அவை கட்டப்பட்டு முடிந்த பின் அதன் திறப்பு விழாவன்று தீபகற்பத்தில் இருந்த அனைத்துக் குடும்பங்களிடம் இருந்தும் பெற்ற வரியில் பெரும் அளவில் தானங்கள் செய்தார்.

ஸ்ரீநிகாவின் மரணத்திற்குப் பின் அவருடைய மகன் வோஹரிகாடிஸ்ஸா *(Voharikatissa)* என்பவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் நீதியும், நேர்மையும் கொண்டு முன் காலத்தைய பழக்க வழக்கங்களை மாற்றாமல் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் ஒருவருக்கு ஏற்படும் உடல் காயத்தை அபராதம் எனக் கருதியதால் அவருக்கு அந்த பெயர் ஏற்பட்டது.

குப்பக்காமாவில் இருந்த தேராவின் போதனைகளைக் கேட்டவர் ஐந்து இடிந்திருந்த கட்டிடங்களை சீரமைத்தார். அனுராமாவில் இருந்த தேரா மஹாடிஸ்ஸாவின் அறிவுறைப்படி மசிலப்பட்டினாவில *(Mucelapattana)* நிறைய தானங்களை செய்தார். வோஹரிகாடிஸ்ஸா அபயகிரி மற்றும் மஹாவவிகாராவில் இரண்டு பெரிய கூடங்களை அமைத்தார். அது போல கிழக்குப் பகுதியில் இருந்த போதி ஆலயத்தில் இரண்டு பித்தளையில் ஆன சிலைகளை வைத்தார். அவர் சட்டபானகபாசதா *(Sattapannakapasada)* என்பதை கட்டி

மஹாவிகாராவுக்கு மாதம் ஆணிரம் பணம் தந்து வந்தார். அபயகிரி விகாரா, தஷ்ஷிணமூலா *(Dakkhinamula),* மாரிகவட்டி விகாரா, குலலிடிஸ்ஸா *(Kulalitissa),* மஹியாங்கன விகாரா, மஹானஹடிஸ்ஸா மற்றும் கல்யானிகாவில் *(Kalyánika)* இருந்த எட்டு துாபாக்கள் தலை மீது குடைகளை அமைத்தார். மூலநாகசேனாபதி விகாரா (*Mulanagasenapati-vihara*), தஷ்ஷின விகாரா, மரிகவட்டி விகாரா, புட்டபாகா *(Puttabhaga),* ஈசாரசாமனா, நாகதீபகா போன்ற ஆறு விகாராக்களில் நான்கு புறமும் சுவர்களை எழுப்பினார். ஆங்கு அனுரராமா *(Anurarama)* என்ற உபோசாதா மண்டபங்களையும் கட்டினார். புனிதர்களைப் பற்றிய செய்திகளை விளக்கும் அரியவாசமா (*Ariyavamsa),* என்ற புனித நுால் படிக்கப்பட்ட பொழுது தான தருமங்கள் செய்யப்பட்ன. கடன்பட்டிருந்த பிட்குக்களின் கடன்களை அடைக்க மூன்று லட்சம் *(3,00,000)* செலவு செய்தார். வேசகா பண்டிகையின் பொழுது ஒவ்ஒரு பிட்குவிற்கும் மூன்று ஆடைகளைத் தந்தார். தன்னுடைய மந்திரியான கபிலா மூலம் கேனன் *(Canon)* வடநாட்டு மஹாயனர் போதித்து வந்த வேடுல சூத்திர *(Vetulya)* போதனைகளை தடுத்து நிறுத்தி புத்த சமயத்தின் உண்மையான போதனைகளை தழைக்கச் செய்தார்.

மன்னனுடைய இளைய சகோதரரான அபயநாகா என்பவருக்கு மன்னனின் மனைவியுடன் இருந்த காதல் பற்றி தெரிந்து விட்டதினால் உயிருக்குப் பயந்து ஊரை விட்டு ஓடி பல்லதித்தா *(Bhallatittha)* என்ற இடத்திற்குச் சென்று விட்டார். அதற்கு முன் கோபத்தினால் அவருடைய மாமனான சுபதேவாவின் *(Subhadeva)* கைகளையும் கால்களையும் வெட்டினார். மாமன் மன்னனிடம் சென்று அந்த செயலைக்

பற்றிக் கூறினார். அவரால் குடும்பம் பிளவுபட்டது. அபயநாகா தப்பி ஓடிய பொழுது கப்பலில் ஏறப் போகையில் அவருடன் கூடச் சென்ற நாய் ஒன்று அவருக்கு இடைஞ்சலைத் தர அதை மிருகத்தனமாக அடித்து விரட்டியும் அது மீண்டும் அவன் பின் சென்றது. அதை சுட்டிக் காட்டிவர் தம்முடைய படையினர் அந்த நாயைப் போல தமக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என கூறினார்.

அதன் பின் அபயா தன்னுடைய தூதுவனை மன்னனிடம் அனுப்பி பொழுது சுபதேவா வந்த தூதுவன் மீது ஒரு பனை மரத்தை சாய்க்க முயல அவன் பயந்து திரும்பி ஓடினான். அபயநாகா கோபம் அடைந்து பெரும் படையுடன் வந்து தனது சகோதரருடன் யுத்தம் செய்தார். அதில் மன்னன் தோற்று தன்னுடைய மனைவியுடன் மலாயாவுக்கு ஓடிப் போன பொழுதும் அவரைத் துரத்திச் சென்று அவரை கொன்று விட்டு அவர் மனைவி தூக்கி வந்து அரசைக் கைப்பற்றி எட்டு வருடங்கள் ஆண்டார்.

அந்த மன்னனும் போதி மரத்தைச் சுற்றி வேடி பாறைகளை அமைத்தும், லோஹபாசதாவில் கூடமும் அமைத்தார். இரண்டு லட்சம் *(2,00,000)* செலவு செய்து துணிகள் வாங்கி அவற்றை தீபகற்பத்தில் இருந்த பிட்குக்களுக்கு தானம் செய்தார்.

அபயநாகாவின் மரணத்திற்குப் பின் ஶ்ரீநாகா II ***(Sirinága II)*** என்பவர் ஆட்சிக்கு வந்தார். அவர் அவருடைய சகோதரனான திஸ்ஸாவின் மகன். இரண்டு வருடங்கள் ஆட்சி செய்தவர் போதி மரத்தை சுற்றி இடிந்திருந்த சுவர்களை மீண்டும் கட்டினார். போதி ஆலயத்தை சுற்றி இருந்த இடத்தில் மணல்

போட்டிருந்த நடை பாதையையும் மீண்டும் சீரமைத்தார். முசிலா மரத்தின *(Mucela-tree)* தென்புறத்தில் ஹம்சவத்தா *(Hamsavatta)* என்ற விகாராவையும், பெரிய மண்டபத்தையும் கட்டினார். அவர் மரணம் அடைந்ததும் அவருடைய புதல்வாரன விஜயகுமாரா *(Vijaya-Kumaraka)* என்பவர் ஒரு வருடம் ஆண்டார்.

மஹியகானாவில் மூன்று லம்பகன்னாக்கள் நண்பர்களாக இருந்தனர். அவர்களின் பெயர் சம்ஹதிஸ்ஸா *(Samghatissa)* , சம்ஹபோதி *(Samghabodhi)* மற்றும் கோதகபாயா *(Gothakabhaya)* என்பது. அவர்கள் மன்னனிடம் வேலை செய்ய டிஸ்ஸா நதிக் கரை வந்து கொண்டு இருந்த பொழுது ஒரு குருடர் அவர்களுடைய நடை சப்தத்தைக் கேட்டு இந்த நாட்டை ஆளப் போகும் மூன்று மன்னர்களின் சப்தம் இது எனக் கூவினார். அந்த சப்தத்தை பின்னால் வந்து கொண்டிருந்த அபயா கேட்டதும் நின்றார். மீண்டும் அந்த குருட்டு மனிதன் அதே ஆருடத்தை திருப்பிச் சொல்ல யாருடைய ஆட்சி நிலைத்து நிற்கும் என அவர் கேட்க, குருடன் கூறினார் 'கடைசியாக செல்பவரே நிலையான ஆட்சி தருவார்'.

நாட்டிற்குச் சென்ற மூவரும் மன்னன் விஜயாவைக் கொன்ற பின் படைத் தலைவர் சம்ஹதிஸ்ஸாவை மன்னனாக்கினர். அவரும் அனுராதபுரத்தில் நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தார். அவரும் ஸ்துபாவில் வண்ண ரத்தினங்கள் பதித்த வெண்சாமரக் குடையை நிறுவி அதன் நான்கு பக்கங்களிலும் இருந்த சூரிய சித்திரத்தின் மீது ஒவ்ஒன்றின் விலையும் ஒரு லட்சம் *(1,00,000)* என்ற அளவில் கற்களைப் பதித்தார்.

சட்டா பண்டிகையின் பொழுது நாற்பதாயிரம் பிட்குக்குவிற்கும் ஆறு ஆடைகயைத் தந்தார்.

தாமஹலாகாவில் தேரா மஹாதேவாவின் போதனைகளைக் கேட்டுக் கொண்டு இருந்த பொழுது அரிசி உணவில் தயாரிக்கப்பட்ட கஞ்சியின் மகிமைப் பற்றி அவர் கூற, மனம் மகிழ்ந்து போன மன்னன் நாட்டின் நான்கு நுழை வாயில்களிலும் அரிசியில் செய்த விஷேச கஞ்சியை எத்தனை தேவையோ அந்த அளவு கொடுத்தார்.

அடிக்கடி ஆட்சியாளர்களின் மனைவிகள் ஜம்பு பழங்களைச் சாப்பிட சிலோனின் வடக்குப் பகுதியில் இருந்து இந்திய துணை கண்டத்திற்கு போகும் வழியில் இருந்த பாசினடிபாகா *(Pacinadipaka)* என்ற தீவிற்கு யாத்திரையை மேற் கொண்டனர். அதனால் அங்கிருந்த பசினதிபா வெறுத்துப் போய் அந்த பழத்தில் ஒரு முறை விஷம் வைத்து விட அதை மன்னன் உண்டு மரணம் அடைந்து விட்டார். அதனால் சம்பபோதியை அபயா மன்னனாக முடிசூட்டிக் கொண்டார்.

அந்த மன்னனை ஸ்ரீ சம்பபோதி என அழைத்தனர். அவர் புத்த சமயத்தின் ஐந்து கொள்கைகளையும் தவறாமல் கடை பிடித்து இரண்டு ஆண்டுகள் ஆண்டார். மஹாவிகாரில் ஐந்து சலகா பள்ளிகளை *(salaka-house)* நிறுவினார். அந்த நாட்டினர் பஞ்சத்தினால் அவதியுற்ற பொழுது தானும் போதி மரக் கூடத்தில் சென்று அமர்ந்து கொண்டு மடிந்து போனாலும் சரி மழை வராவிடில் அங்கிருந்து போக மாட்டேன் என சபதம் செய்து கொண்டார். அடுத்த சில மணி நேரத்தில் ஸ்ரீலங்காவில் கனத்த மழை பெய்யத் துவங்கியும் அவர்

எழுந்து வரவில்லை. ஆகவே பல இடங்களில் வடிகால் குழாய்களை அமைத்து தண்ணீரை வெளியேற்றி மன்னனை எழுப்பி வந்தனர்.

ஒரு முறை அவருடைய நாட்டில் அவருக்கு எதிராக புரட்சி நடந்த பொழுது அவர்களைக் கொல்லாமல் விடுதலை செய்து விட்டு எவரும் அறியாமல் புரட்சியாளர்கள் தங்கி இருந்த இடத்தில் இறந்து போனவர்களுடைய உடல்களை எரித்து விடச் சொல்ல அவர்கள் தம் மக்களை உயிரோடு எரிக்கின்றார் என்று எண்ணிய புரட்சியாளர்கள் பயமடைநது ஓடினர்.

ரத்தக்கி *(Ratakkhi)* என்ற யட்சிணி, கண்களை சிவப்பாக்க வைத்து அதன் பின் நோய் தரும் வகையில் ஒரு வியாதியை ஒரு ஊரில் ஏற்படுத்தியது. அந்த நோய் வந்தவர்கள் வேறு எவருடனாவது சென்று பேசினாலோ, அவர்களுடைய கண்களைப் பார்த்தாலோ அவர்கள் மரணம் அடைந்து விடுவார்கள். மரணம் அடைந்தவரை அந்த யாக்கா என்ற யட்சிணி முழுங்கி விடும்.

அதைக் கேள்விப்பட்ட அரசன் மனம் உடைந்து போய் தன் அறையில் சென்று எட்டு உபோசதா விரதங்களை அனுஷ்டித்து அந்த யாக்கா அந்த இடத்தில் வரும்வரை தான் எழுந்திருக்க மாட்டேன் என அமர்ந்திருந்தார். அவருடைய பூரண பக்தியின் மகிமையினால் அந்த யாக்க அவரிடம் வந்தது. அது யார் என்று கேட்டவரிடம், தான் ஒரு யாக்கா என்றது. அதற்கு என்ன வேண்டும, ஏன் தன்னுடைய மக்களை விழுங்குகின்றாய் எனக் கேட்டவரிடம் தனக்கு ஒரு மானிலம் முழுவதிலும் உள்ள மக்கள் வேண்டும் என்றது. அதைத்

தன்னால் ஒப்புக் கொள்ள முடியாது என்றவரிடம், பேரம் பேசி, தான் கேட்டவற்றை ஒவ்ஒன்றாக குறைத்துக் கொண்டு ஒரு மனிதனையாவது தரவேண்டும் என முடிவாகக் கூறியது.

அப்படி என்றால் சரி என்னை எடுத்துக் கொள் என மன்னன் கூற அதை தன்னால் ஏற்க முடியாது என்றது யாக்கா. ஆகவே கிராமங்களில் இருந்து தினமும் அதன் எல்லைக்கு வந்து அதற்கு உண்ண உணவுப் பொருட்களைத் தர ஏற்பாடு செய்வதாக உறுதி மொழி கூறினார் மன்னன். அதை ஏற்றுக் கொண்ட யட்சினியும் சென்று விட்டது. அதன் பின் அதனால் ஏற்பட்ட பிரச்சனையும் முடிவுக்கு வந்தது.

மன்னனுடைய பொருளாளர் கோதபைய்யா என்பவர் *(Gothakabhaya)* அவருக்கு எதிராக மாறினார். ஆகவே தன்னால் எந்த உயிருக்கும் மரணம் ஏற்படக் கூடாது என்ற முடிவுடன் தனது கைகளில் ஒரு வடிகட்டியை எடுத்துக் கொண்டு தெற்குப்புற வாசல் வழியே மன்னன் தப்பி ஓடினார்.

அவரை வழியில் சந்தித்த ஒரு மனிதர் தன்னுடைய உணவை அவருக்குத் தர அவர் அதை ஏற்க மறுத்தார். தன்னால் அவருக்கு எதுவும் தர இயலாது என்பதினால் அதை ஏற்க மறுத்தார். வந்தவரும் விடாமல் பிடிவாதம் பிடிக்க தான் யார் என்பதை தெரிவித்தார் மன்னன் சம்பபோத்தி. நடந்த அனைத்தையும் கூறிய பின் அவர் கொடுத்த உணவை அருந்தியதும் தன்னுடைய தலையை எடுத்துக் கொண்டு மன்னனிடம் காட்டினால் அவருக்கு நிறைய பரிசுப் பொருட்கள் கிடைக்கும் என்றார். உணவு அருந்தியதும் மன்னர் மரணம் அடைய அவருடைய தலையை அந்த வழிப்போக்கர் எடுத்துக் கொண்டு போய் கோதபையாவிடம் காட்ட அவருக்கு நிறைய

தங்கம் மற்றும் பலவிதமான பரிசுக்களை அவர் வழங்கி மரணம் அடைந்த மன்னனுக்கு இறுதிக் கடன்களையும் செய்யச் சொன்னார்.

இப்படியாக மேஹவானபைய்யா *(Meghavannabhaya)* என்ற கோதபைய்யா பதிமூன்று ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் இன்னொரு மாளிகையைக் கட்டி, அதன் வாயிலில் பெரிய கூடத்தையும் அமைத்தார். தினமும் ஆயிரக்கணக்கான புத்த பிட்குக்களை அழைத்து அரிசியில் செய்த கஞ்சி, மற்றும் ஆடைகள் தந்து வந்தார். இருபத்தி ஒன்று நாட்கள் அதைத் தொடந்து செய்தார். மஹாவிகாராவில் இன்னொரு கூடம் அமைத்தார். லோகபாதசாவில் தூண்களை புதுப்பித்தார். நான்கு நுழை வாயில்களிலும் வண்டிச் சக்கர சின்னங்களை அமைத்தார். மூன்று நுழை வாயில்களிலும் கல்லில் செய்யப்பட்ட சிலைகளிலும், தெற்குப்புற வாயிலில் கல்லில் செய்யப்பட்ட சிம்மாசனத்தையும் அமைத்தார். மேற்கு பகுதியில் தியான மண்டபம் கட்டினார். தீபகற்பத்தில் இடிபாடுகளுடன் இருந்த அனைத்து கட்டிடங்களையும் பழுது பார்க்கும்படிச் செய்தார். தூபமாலாவில் இருந்த ஆலயத்தையும், தேரா மஹுன்தா இருந்த அம்பத்தால மடாலயத்தையும் மீண்டும் திறக்கச் சொன்னார்.

அது மட்டும் இன்றி தூபராமாவில் இருந்த மனிசோமா *(Manisoma)*, மானிக்கவட்டி விகாராவில் இருந்த மனிசோமராமா *(Manisomarama)*, தஷ்ஷின விகாராவில் இருந்த உபோசதாக்கள் போன்றவற்றை மீண்டும் திறக்கச் சொன்னார். மேகவானபைய்யா *(Meghavannabhaya)* என்ற புதிய விகாராவைக் கட்டி அதன் திறப்பு விழாவன்று தாம்

அழைத்திருந்த முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்களுக்கு ஆறு ஆடைகளும் தந்தார்.

அது போல ஒவ்ஒரு வருடமும் வேசகா பண்டிகையைக் கொண்டாடச் சொல்லி புத்த பிட்குக்கள் ஒவ்ஒருவருக்கும் ஆறு ஆடைகள் தானம் செய்து வந்தார். அபயகிரி விகாரில் இருந்த அறுபது பிட்குக்கள் மாற்றுக் கருத்துக் கொண்ட வேடுலா போதனைகளை ***(Vetulya-doctrine)*** பரப்பிக் கொண்டு புத்த போதனைகளை நிந்தித்துக் கொண்டு இருந்ததினால் அவர்களை மடத்தை விட்டு வெளியேற்றி, சமுதாயத்தில் இருந்து விலக்கி வைத்து நாடு கடத்தி அவர்களால் ஏற்பட்டிருந்த குழப்பத்தை விலக்கினார். கோலா ***(Cola)*** பிரிவை சேர்ந்த சங்கமித்தா ***(Samghamitta)*** என்ற பிட்கு மந்திரங்களை உபயோகித்து பேய், பிசாசுகளை ஓட்டுபவர். அவர் மஹாவிகாராவுக்கு வந்து தங்கிய பொழுது அங்கிருந்த பிட்குக்களிடன் மனஸ்தாபம் ஏற்பட்டது.

அந்த ஒழுங்கீனமற்ற பிட்கு துாபராமாவில் நடந்த கூட்டங்களில் கலந்து கொண்டு சம்பபாலாவில் ***(Samghapala)*** இருந்த தேரா கோதபைய்யாவைக் குறைக் கூறிக் கொண்டும் இருந்தார். அவர் மன்னனின் விருந்தாளியாக விரைவில் மாறினார். அவர் வீட்டிற்கும் அடிக்கடி செல்லத் துவங்கினார். அவர் மீது மிகுந்த மரியாதை கொண்ட மன்னன் தன்னுடைய மூத்த மற்றும் இளைய மகன்களான ஜெத்ததிஸ்ஸா ***(Jetthatissa)*** மற்றும் மஹாசேனா ***(Mahasena)*** என்பவர்களை அவரிடம் பயிற்சி பெற அனுப்பினார். அந்த பிட்குவும் இளையவரின் மீது அதிக அக்கறைக் கொண்டு இருந்ததினால் மூத்தவன் அவரை வெறுத்து வந்தான். மன்னனின் மரணத்திற்குப் பின் ஜெத்ததிஸ்ஸா ***(Jetthatissa)*** மன்னனாகி

தனக்கு எதிராக இருந்த மந்திரிகளை தண்டிக்க முடிவு செய்தார். தந்தையின் சவ ஊர்வலத்தில் தன்னுடைய தந்தையின் உடலை எடுத்துக் கொண்டு இளைய சகோதரனை முன்னால் நடந்து போகச் சொல்லிய பின் அவன் பின்னால் மந்திரிகள் அணிவகுத்துச் செல்ல கடைசியாக ஜெத்ததிஸ்ஸா சென்றார். சுடுகாட்டிற்குச் சென்று தந்தைக்கு இறுதிக் கடன்களை செய்து சிதைக்கு தீ மூட்டியவுடன் அந்த மயானத்தின் கதவுகளைப் பூட்டச் சொல்லி விட்டு தனக்கு எதிராக இருந்த மந்திரிகளின் தலைகளைச் சீவி தன்னுடைய தந்தையின் சிதையைச் சுற்றி எறிந்தார். அத்தனை கொடுமையாக அவர் நடந்து கொண்டதினால் கொடுங்கோலன் என்றப் பெயரைப் பெற்றார். அதன் இடையில் மஹாசேனாவுடன் கலந்து ஆலோசனை செய்திருந்த பிட்கு சங்கமித்தா மன்னனின் கொடுமையைக் கண்டு பயந்து வேறு நகருக்கு ஓடிவிட்டார். மஹாசேனா எப்பொழுது பதவியில் அமர்வார் எனக் காத்து நின்றார்.

ஜெத்ததிஸ்ஸா தன்னுடைய தந்தை லோஹபாதசாவில் கட்டி முடிக்காமல் விட்டிருந்த ஏழு மாடிக் கட்டிடத்தைக் கட்டினார். அதன் மதிப்பு ஒரு கோடி *(1,00,00,000)* ஆயிற்று. அதற்கு அறுபதாயிரம் *(60,000)* செலவு செய்து ஒரு மாலையை மன்னன் கொடுக்க அதன் பெயர் மனிபாடசதா *(Manipasada)* என ஆயிற்று.

துபாவிற்கு விலை உயர்ந்த இரத்தினங்களைக் கொடுத்தார். போதி மர ஆலயத்திற்கு மூன்று நுழை வாயில்களை வைத்தார். ஐந்து இடங்களில் தங்கி இருந்த புத்த பிட்குக்களுக்கு பாசினடிஸ்ஸபப்பதா *(Pacinatissapabbata)* என்ற விகாராவை அதைத்துக் கொடுத்தார்.

துாபராமாவில் தேவநாம்பியதிஸ்ஸா செய்து வைத்திருந்த அற்புதமான கற் சிலையை எடுத்து வந்து அதை பாசினடிஸ்ஸபப்பதாவில் வைத்தார். சிடியபப்ப விகாராவில் இருந்த காலமாட்டிக்க குளத்தையும் அது போல் பாசினடிஸ்ஸபப்பதாவுக்குக் கொடுத்த பின் பெரிய விழா மற்றும் வேசகா பண்டிகை போன்றவற்றை செய்து முப்பதாயிரம் *(30,000)* புத்த பிட்குக்களுக்கு ஆறு ஆடைகள் கொடுத்தார். ஆலம்பகாலா குளம் வெட்டினார். இப்படியாக பல நற் காரியங்களை செய்தவர் பத்து ஆண்டுகள் ஆண்டார்.

எத்தனை நல்ல குணம் பெற்றிருந்தாலும், எத்தனை நல்ல காரியங்களை செய்திருந்தாலும், சுதந்திரமாக செயல் பட்டாலும், தித்திப்பான உணவு பண்டத்தில் கலந்து விட்ட விஷம் போல, நல்ல காரியங்களை விட நேர்மையற்ற முறையில் ஆட்சி செய்து கொடுமையான காரியங்களை செய்பவர் இறுதியில் நல்ல பலன்களின் விளைவுகளை அனுபவிக்க முடிவதில்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி ஆறாம் பாகமான ‘ பதிமூன்று மன்னர்கள் ’ என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION